## தி.ஜ. மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, அம்பத்தூர்

## அரையாண்டுத்தேர்வு -2017

மதிப்பெண் : 60
நேரம் : 2.30 மணி

### பகுதி-அ

**1. பொருள் தருக: (2 மட்டும்)** **(2x1=2 )**

1.வனப்பு 2. கணக்காயர் 3.வித்து

**2. பிரித்து எழுதுக: (2 மட்டும் )** **( 2x1=2)**

1. விலையில்லா 2. செவ்விதழ் 3.பருவப்பெண்

**( 3 x1=3)**

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக: (மூன்று)**

1. பாவலர்மணி எனப் புகழப்படுபவர்______________________________.
2. கலம்பகம் _________________உறுப்புகளைக் கொண்டது.
3. வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின்மீது __________ கொண்டானாம்.
4. சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர்________________.
5. இறைவன் _________________ கிழவிக்காக மண் சுமந்தார்.

**4. பொருத்துக:** **(4x1=4)**

| | | |
|---|---|---|
| 1. அறுவை வீதி | - | பொற்கடைவீதி |
| 2.கூலவீதி | - | மன்னவர் வாழும் வீதி |
| 3.பொன்வீதி | - | ஆடைகள் விற்கும் கடைவீதி |
| 4.மன்னவர் வீதி | - | தானியக்கடைவீதி |

**5. சரியான விடையைத் தேர்வு செய்க :** **(4x1=4)**

1. தமிழகத்தின் 'வோர்ட்ஸ்வொர்த்' எனப் புகழப்படுபவர்
   அ) கம்பதாசன் ஆ) பாரதிதாசன் இ) வாணிதாசன்

2. அம்மானை என்பது
   அ) கபடி ஆ) நொண்டி இ) ஒரு வகை காய் விளையாட்டு

3. 'திரைக்கவித் திலகம்'எனப் போற்றப்படுபவர்
   அ) மருதகாசி ஆ) வாணிதாசன் இ) சுவாமிநாத தேசிகர்

4. நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தவர்
   அ) சிவாஜி ஆ) பாண்டித்துறைத்தேவர் இ) திருமலை நாயக்கர்

## பகுதி-ஆ

**6. அடிமாறாமல் எழுதுக :** **(1x4 =4 )**

1.'வளர்ந்துவிட்ட' எனத் தொடங்கி 'சொத்தம்மா' என முடியும் வரையுள்ள ஏர்முனைப் பாடல்.

## பகுதி-இ

**7. பின்வரும் செய்யுள் குறுவினாக்களுக்கு விடை தருக .( 3 மட்டும் )** **( 3x2=6)**

1. கல்வி கற்பிப்போர் எத்தகையவர்?
2. தூய்மை உடையாரின் செயல்கள் யாவை?
3. என்பணிந்த தென்கமலை ஈசனார் யார்?
4. அம்மானை -விளக்குக.

**8. பின்வரும் செய்யுள் சிறுவினாக்களுக்கு விடை தருக. (2 மட்டும் )** **( 2x3=6 )**

1. முருகப்பெருமானின் சிறப்புகளை எழுதுக .
2. பள்ளிக்குச் செல்லும் ஒழுங்கு குறித்து வாணிதாசன் குறிப்பிடுவன யாவை?
3. இறைவன் மண் சுமந்த வரலாற்றை எழுதுக.

## பகுதி-ஈ

**09. பின்வரும் உரைநடை குறுவினாக்களுக்கு விடை தருக .( 3 மட்டும் )** **( 3x2=6)**

1. மதன்மோகன் மாளவியாவின் ஈர்ப்பான இலக்கிய நடைக்குக் காரணம் என்ன?
2. முச்சங்கங்கள் எவை?
3. கைத்தறி நெசவு நடைபெறும் ஊர்கள் நான்கனை எழுதுக.
4. தமிழகத்தின் சிறப்பை உணர்த்துக.

**10. பின்வரும் உரைநடை சிறுவினாக்களுக்கு விடை தருக. (2 மட்டும் )** **( 2x3=6 )**

1. பள்ளி எவ்வாறு அமைய வேண்டுமென்று காந்தியடிகள் உரைக்கின்றார் ?
2. மதுரையின் பெயர் காரணங்களுள் ஏதெனும் இரண்டு கூறுக.
3. பட்டுநூல் எவ்வாறு உருவாகிறது?

## பகுதி-உ

**11. பின்வரும் நெடுவினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடை தருக :** **( 1x5=5 )**

1. உழவரின் செயல்களாகக் கவிஞர் மருதகாசி கூறுவனவற்றைத் தொகுக்க.
2. திருமலை நாயக்கரின் திருப்பணிகள் குறித்து எழுதுக.

## பகுதி-ஊ

**12. பின்வரும் மொழிப்பயிற்சிகளை நிறைவு செய்க.** **(3x1=3)**

**1. உரிய தமிழ் எண்களைத் தேர்வு செய்க.**

1.ஏழு என்பதன் தமிழ் எண்
அ) க ஆ) எ இ) உ

**2. கீழுள்ள சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொல்லைக் கண்டறிந்து எழுதுக.**

1. தேசம்
2. சேமம்

**13. பின்வரும் இலக்கண வினாக்களுக்கு விடை தருக. (இரண்டு)** **( 2x2=4 )**

1. காரணப் பெயர் என்றால் என்ன ? சான்று தருக.
2. சினைப்பெயர்கள் நான்கனை எழுதுக.
3. பெயரெச்சம் என்றால் என்ன ? சான்று தருக.

## பகுதி-எ

**14. பின்வரும் துணைப்பாட வினாக்களுக்கு விடையளிக்க ( 1 மட்டும் )** **( 1x5=5 )**

1. காளியப்பனை ஊர் மக்கள் ஏன் வெறுத்தனர்?
2. ‘நிலைத்த செல்வம் கல்விச்செல்வம்’-இச்சிறுகதை உணர்த்தும் செய்தியை விவரிக்க.

**************